பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை 21.11.2023 அதிர்வு 113

## இளைஞர் உயிரிழந்த சம்பவம்:
## விசாரணைப் பொறிக்குள் இதுவரை 4 பொலிஸார்!

(எஸ்.நிதர்ஷன்)

வட்டுக்கோட்டை இளைஞர் மரணத்துடன் தொடர்புடைய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள், தற்போது 04 ▶

# யாழ். பல்கலையில் உணர்வெழுச்சி; மாவீரர்களுக்கு மாணவர்கள் அஞ்சலி





(எஸ்.நிதர்ஷன்)

மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின முதல் நாள் நிகழ்வு நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர் நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தையொட்டி 04 ▶

# நாடாளுமன்றத்தில் இன்று ஆளுந்தரப்பு வெறியாட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடமிருந்து ஆவணங்களை பறித்து உரையாற்ற விடாது ஒலிவாங்கியை முடக்கினர்



நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றிய போது சபையில் அமளிதுமளி ஏற்பட்டதையடுத்து சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடிக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அதில் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் பெயர்களை உச்சரித்தார்.

பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என்ன? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 04 ▶

## இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் இந்தியக் கடற்படையால் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கை மீனவர்கள் ஐவரை இந்தியக் கரையோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

மன்னாரில் இருந்து 4930 இலக்கப் படகில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்களே எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இன்று மதியம் 04 ▶



## மற்றைய சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

திருட்டுச் சம்பவம் தொடர்பில் அண்மையில் வட்டுக்கோட்டைக் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர் பிணையில் 04 ▶

## பஸ்ஸில் இருந்து தவறி விழுந்த தம்பதி; மனைவி உயிரிழப்பு; கணவன் படுகாயம்



(ரஸீன் ரஸ்மின்)

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி இ.போ.ச. பஸ்ஸின் மிதி பலகையில் இருந்து பயணித்த தம்பதியினர் தவறி கீழே விழுந்ததில் படுகாயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 04 ▶

## கொக்குத்தொடுவாயில் தொடரும் அகழ்வுப் பணி



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி மீள ஆரம்பிக்கப்பட்டு இன்று 04 ▶

# யாழ். பல்கலையில் மாவீரர் வார முதல் நாள் நிகழ்வு



(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)




# உயிரிழந்த இளைஞரின் உடலைத் தாங்கியவாறு சித்தங்கேணி சந்தியில் நீதி கோரிப் போராட்டம்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கொடூர தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞரின் உடலைத் தாங்கியவாறு சித்தங்கேணி சந்தியில் நீதி கோரிப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞர் நாகராசா அலெக்ஸின் இறுதிக்கிரியை அவரின் இல்லத்தில் இன்று நடைபெற்றது.

இந்த இளைஞரின் இறுதிகிரியையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

அலெக்ஸின் மரணமானது வட்டுக் கோட்டை பொலிஸாரின் கோர முகத்தை எடுத்துக் காட்டுவதுடன், சம்பந்தப்பட்ட பொலிஸார் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது அப்பகுதியில் ஒரு கொதி நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தக் கொலையுடன் சம்பந்தப் பட்ட பொலிஸாரை கைது செய்யு மாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்தும் கண்ட னங்களை வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

இவ்வாறான சூழலிலேயே இன்று உயிரிழந்த இளைஞரின் உடலுடன் நீதி கோரிப் போராட்டம் இடம்பெற் றது.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பஸ்ஸில் இருந்து...**

சீதுவை, அம்பலன்முல்ல பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - சிலாபம் வீதியில் தன்டுகம விமானப் படை வீதித் தடைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் காயமடைந்த ஆண் மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**விசாரணைப் பொறிக்குள்...**

விசாரணைகளுக்காக, யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒரு சிலரால் விரும்பத்தகாத ஒரு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள், இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் நால்வரும் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

விரைவில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரினாலும் எமக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பொலிஸ் நிலையம் ஒன்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடைபெற்று குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள்.

இந்த விடயம் தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

தற்போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் இருந்து நான்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் அவர்கள் அதே இடத்திலே கடமையாற்றினால் அங்குள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை அழித்து விடுவார்கள்

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை. பொலிஸ் உயர் மட்டத்தில் விசாரணைகளை விரைவாகச் செயற்படுத்துமாறு அழுத்தம் பிரயோகித்துள்ளோம்." - என்றார்.

**யாழ். பல்கலையில்...**

யாழ். பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் தூபியைச் சுற்றி சிவப்பு, மஞ்சள் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரைப் போராட்டக் களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், நவம்பர் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**மற்றைய சந்தேக நபர்...**

விடுவிக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர், பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்த நிலையில் குறித்த வழக்கு இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த உயிரிழந்தவருடன் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட மற்றைய நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அந்த வழக்கை வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட்ட வேண்டும் என்ற சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ் உள்ளிட்ட பலரும் ஆஜராகியிருந்தனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் காட்டுமிராண்டித்தனமான முறையில் சித்திரவதைக்கு உள்ளானமை தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை மீனவர்கள்...**

கைதாகினர்.

இவ்வாறு கைதான இலங்கை மீனவர்கள் ஐவரும் தனுஸ்கோடிக் கொண்டு செல்லப்பட்டு தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

எல்லை தாண்டி வந்த இலங்கை மீனவர்கள் கடற்றொழிலுக்கு வந்தார்களா அல்லது கடத்தல் நடவடிக்கைக்காக வந்தார்களா என்பது தொடர்பில் தமிழகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கொக்குத்தொடுவாயில்...**

இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகளையும், உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண்களையும் அகற்றும் பணி நேற்று நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக இன்று காலை முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

**நாடாளுமன்றத்தில்...**

27/2 கீழ் எழுப்பிய கேள்விக்கு ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து களேபரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவரைச் சுற்றிவளைத்த ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர் கைகளிலிருந்த ஆவணத்தையும் பறித்துச் சென்றுள்ளதுடன் அவரைப் பேச விடாது ஒலிவாங்கியைப் பறித்து இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இதையடுத்து நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

இதேவேளை, தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து ஆளும் தரப்பினர் சபை நடுவில் வந்து எதிர்க்கட்சித் தலைவரின் உரைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஆளும் தரப்பினரது செயற்பாடுகளைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற அமளிதுமளியால் கலரியில் அமர்ந்திருந்த பாடசாலை மாணவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

அமளிதுமளியையடுத்து சபை நடவடிக்கை கூடியபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரையை இடைமறித்த சனத் நிஷாந்த உள்ளிட்ட ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும்

# மண்ணில் விளையக் கூடிய பொருள்களை இறக்குமதி செய்து அரசு வரி செலுத்துகிறது

## பொதுஜன பெரமுனவின் எம்.பி. மதுர விதானகே தெரிவிப்பு

மண்ணில் சாதாரணமாக விளையக் கூடிய சில உணவுப் பொருள்களை இலங்கை இறக்குமதி செய்துள்ளது. இதற்குத் தேவையற்ற இறக்குமதி வரி செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மரவள்ளிக் கிழங்கு, வெள்ளைப்பூடு, உருளைக்கிழங்கு, தக்காளி, பப்பாளி, முலாம்பழம் மற்றும் அன்னாசி போன்ற சில பொதுவாக விளையும் உணவுப் பொருள்களையே இலங்கை இறக்குமதி செய்துள்ளது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே நேற்று (20) தெரிவித்தார்.

கடந்த ஆண்டும் இவ்வாறு விளையக் கூடிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு 295



மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாக எதிர்பார்த்திருக்கும் வேளையிலே இவ்வாறு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது அவசியமற்றது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுவாக மண்ணில் விளையக் கூடிய பொருள்களை இங்கு விளைவிக்காது இறக்குமதி செய்யும் பொருளாதாரத்தை உருவாக்குவது அர்த்தமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

பூமியில் எளிதில் விளையும் பயிர்களை வளர்க்காமல் நிலத்தடியில் உள்ள கனிமங்களைப் பற்றி பேசுவது அபத்தமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஆசிரிய வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை இணைப்பதற்கு விண்ணப்பங்கள் கோரல்

நாடளாவிய ரீதியில் தேசிய பாட சாலைகளில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு இதற்கான விண் ணப்பங்களை கோரியுள்ளது.

தேர்வுக்கான திறந்த போட்டித் தேர்வு எதிர்வரும் 2024 ஜனவரியில் நடத்தப்பட உள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் www.doenets.lk இணையத்தளத்தில் “Online Applications – Recruitment Exams” என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி டிசெம்பர் முதலாம் திகதி என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பயணிகள் செல்வதற்கான புதிய பாதை!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் செல்வதற்கான புதிய பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பாதை விமான நிலைய வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கான பிரத்தியேக அணுகல் பாதையாக இந்தப் புதிய பாதை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன. கட்டுநாயக்க மற்றும் வெயங்கொட வீதி விரிவாக்கல் திட்டமானது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு இந்த வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பாதையானது, விமான நிலைய பயனாளர்களின் செயற்பாடுகளை இலகுவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

# மூளை சாவடைந்து இறந்த இளைஞனால் காப்பாற்றப்பட்டன ஐந்து பேர்களது உயிர்கள்!

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூளை சாவடைந்து இறந்த இளைஞனால் 5 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள் ளன.

மூளைச்சாவு அடைந்த பல்கலைக் கழக மாணவரின் இரு சிறுநீரகங்கள், இதயம், கணையம், கல்லீரல்,கண் கள் ஆகியன வாழ்வுக்கும் மரணத் துக்கும் இடையில் இருந்த ஐந்து நோயாளிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

பார்வையற்ற இருவருக்கு ஒளி வழங்குவதற்காக அவரது கண்கள் இலங்கை கண் மருத்துவ சங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

வேயங்கொட பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இந்த தியாகத்தை செய்துவிட்டு உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞன் ரயிலில் இருந்து தவறி விழுந்ததில் மூளைச்சாவு அடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது தோல், இரத்த நாளங்கள் மற்றும் முழங்கால் எலும்புகள் உட்பட பல உடல் உறுப்புகள் அவரது பெற்றோரின் ஒப்புதலின் பேரில் நோயாளிகளுக்கு மாற்று சிகிச்சைக்காக தானமாக வழங்கப்பட்டுள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரி உறிஞ்சும் ஆண்டு

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் சூழ்நிலையில், அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளில் ஒன்றாக நாட்டின் மக்களிடம் அதிக அளவில் வரிகளை விதித்து, அறவீடுகளை அதிகரித்து, வசூலை முழு அளவில் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கு அரசு வந்துவிட்டது.

புதிய ஆண்டில் வரிவிதிப்பு அமோகமாக இருக்கும். எல்லா விடயங்களிலும் வரி அதிகரிப்பின் நெருக்குவாரத்தை பெரும் இக்கட்டாக மக்கள் எதிர்கொள்வர்.

ஏற்கனவே பெறுமதி சேர் வரி எனும் வற் வரியை 18 வீதமாக உயர்த்தும் தீர்மானத்தை அரசு எடுத்துவிட்டது.

அரசின் புதிய நடவடிக்கைகள் காரணமாக பொருள்களின் விலைகள் எகிறும். சேவைக் கட்டணங்கள் உச்சத்தைத் தொடும். விலைவாசி உயரும். பண வீக்கமும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

வரி விதிப்பின் தீவிரம் ஏற்கனவே யதார்த்தத்தில் நடைமுறையில் வெளிப்படத் தொடங்கிவிட்டது.

இலங்கையின் சரித்திரத்தில் முதல் தடவையாக நாட்டின் வரி அறவீடு - வசூல் - இவ்வருடம் மூன்று லட்சம் கோடி ரூபாயைத் தாண்டும் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை (17ஆம் திகதி) வரை அரசுக்குக் கிட்டிய வரி அறவீடு 2 லட்சத்து 39 ஆயிரத்து 400 கோடி ரூபா என ஜனாதிபதி செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி ஸ்திரப்படுத்தல் பிரிவுப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.ஜி.குமாரதுங்கதகவல்வெளியிட்டிருக்கின்றார்.

இன்னும் முப்பது வேலை நாள்கள் இவ்வருடத்தில் எஞ்சியுள்ள நிலையில், வருட முடிவில் வரி வசூல் மூன்று லட்சம் கோடி ரூபாவை நிச்சயம் தாண்டும் என்றார் அவர்.

இலங்கை அரசுக்கு வரி அறவீடுகளை அதிகம் திரட்டி தருவன மூன்று பிரிவுகள்.

முதலாவது - உள்நாட்டு இறைவரித் திணைக்களம். இதன் மூலமே 84 வீதமான வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மற்றைய இரண்டும் முறையே சுங்கத் திணைக்களமும் கலால் திணைக்களமும் ஆகும் .

இதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மூலமாக வரி அறவீடுகளை இன்னும் தீவிரமாக்கத் தற்போதைய அரசு தீர்மானம் எடுத்திருக்கின்றது எனத் தெரிகின்றது.

வரி கட்டாமல் ஏய்ப்போரையும், குறைந்த வரி செலுத்தி விட்டு தப்புவோரையும் மடக்கி, அடுத்த ஆண்டிலிருந்து முழு அளவில் வரியை உறிஞ்சி எடுக்கும் திட்டம் ஒன்றையும் தீவிரமாக முன்னெடுக்க அரசு தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் இத்திட்டத்தின் கீழ், நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் - ஒருவர் தவிர்க்காமல் - சகலருக்கும் வரி தொடர்பான கோவைகள் இலக்கமிடப்பட்டு திறக்கப்படவிருக்கின்றன.

நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டோர் ஒரு கோடி 60 லட்சம் பேர் உள்ளனர். அவர்களில் குறைந்தது 10 லட்சம் பேராவது வரி செலுத்தத் தகமையுள்ளோர் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டியவர்களாக இருப்பர் என அரசு மதிப்பிடுகிறது. ஆனால், புதிதாக ஆக, ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 253 பேரே வரி செலுத்துகைக்கான பதிவுகளை செய்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஏனையோரையும் மடக்கி, வரி அறவிடும் திட்டத்திற்குள் கொண்டு வரும் தீவிர முயற்சியை அரசு ஆரம்பித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆக, அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்குமோ என்னமோ தெரியவில்லை. ஆனால் நிச்சயம் வரி உறிஞ்சும் ஆண்டாக அது இருக்கும் என்பது உறுதி.

# தேசிய மட்ட பரதநாட்டிய போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழி தின போட்டிகள் அனுராதபுரத்தில் இடம்பெற்றது.

இதன் போது கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளால் மேடையேற்றப்பட்ட பரத நாட்டியம் அனைவரது பாராட்டைப் பெற்றதுடன், தேசிய மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுக் கொண்டது.



## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

“மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்.”

பொ. ஐங்கரநேசன்
தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்





# நாடு சுமூக நிலைக்குத் திரும்ப 20 வருடங்களாவது செல்லும்!

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் தெரிவிப்பு

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

நாடு சுமூக நிலைக்குத் திரும்பி அபிவிருத்திப் பாதையில் பயணிக்க குறைந்தது 20 வருடங்களாவது செல்லும். ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டுதான் எல்லாமே இடம்பெறுகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணி, நீர், வாழ்வாதாரம், வெறுப்புப் பேச்சு, கருத்துச் சுதந்திரம், அணிதிரண்டு செயல்படுதல் உள்ளிட்ட விடயங்களில் நாடளாவிய ரீதியில் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சவால்கள் முரண்பாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டும் செயலமர்வு ஹபறணை விடுதியில் இடம்பெற்றது.

'இலங்கையில் சமூக சகவாழ்வை முன்னேற்றுவதற்கான முன் கூட்டிய எச்சரிக்கைச் செயல் திறன்களை பலப்படுத்துதல்' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

அடுத்த வருடம் செப்ரெம்பர் மாத மளவில் ஒரு தேர்தலை எதிர்பார்க்க முடியும். ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டுதான் இப்பொழுது எல்லாமே இடம்பெறுகின்றது.

அடுத்த தேர்தலொன்று நடந்து முடியும்வரை இலங்கையில் எந்த விதமான மாற்றங்களையோ செயல் திட்டங்களையோ அமுல்படுத்த முடியாது போகலாம். அதனால்தான் இப்பொழுதிருக்கின்ற அரசு அடுத்து வருகின்ற தேர்தலிலேயே குறியாக இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலை இலக்காக் கொண்டுதான் அனைத்து செயற்பாடுகளும் இருக்குமேயொழிய அதனைத் தாண்டி வேறு எதனையும் எங்களால் எதிர்பார்க்க முடியாது.

சமூர்த்தித் திட்டம் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக அசுவெசும கொண்டு வரப்பட்டதும் தேர்தலை மையமாகக் கொண்டுதான். எதிர்காலத்தில் வரி விதிப்புக்கள் அதிகரிக்கலாம். அது எவ்வாறான வரிவிதிப்புக்களாக இரக்கும் என்பதை நம்மால் ஊகிக்க முடியாத நிலை உள்ளது.

அடுத்த வருடம் செப்ரெம்பெர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெறவுள்ள மனித உரிமைகள் அமர்வில் இலங்கை தொடர்பாக என்ன நடக்கப்போகிறது என்பதையும் எங்களால் அனுமானிக்க முடியாதுள்ளது.

இருந்தபோதிலும், இலங்கையில் நடந்த சம்பவங்கள் பற்றிய உண்மையைக் கண்டறியும் குழு உருவாக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. பொறுப்புக் கூறலில் இலங்கை அரசு அன்றிலிருந்து இன்றுவரை நழுவிச் செல்கின்ற போக்குத்தான் காணப்படுகின்றது.

எனது கணிப்பின்படி இலங்கை சுமுகமான நிலைமையை அடைந்து அதன் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்ல, இன்னும் குறைந்தது 20 வருடங்களாவது எடுக்கலாம். அதுவரையில் நாட்டு மக்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டித்தான் இருக்கும். – என்றார்.

# இத்தாவிலில் வீடு ஒன்றின்மீது விசமிகள் கும்பல் அட்டகாசம்!

பளை, இத்தாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வீதிக் கதவு (கேட்) மற்றும் மதில் மீது இனம் தெரியாத விசமிகள் குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை, கோடரி, கழிவு எண்ணெய், நிறப்பூச்சு மற்றும் பெற்றோல் பைக்குண்டு என்பன சகிதம் வந்த கும்பலே இந்த அநாகரிக செயலைச் செய்துள்ளது.

வீட்டின் நுழைவுக் கதவை கூரிய ஆயுதத்தால் கொத்தியுள்ளனர். மதில் முழுவதும் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டுள்ளது.



மதில் தூணில் பொருத்தப்பட்டிருந்த அழகு மின் குமிழ்களும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# தாதிய உதவியாளர் கற்கை நெறியை பூர்த்தி செய்தோருக்குப் பட்டமளிப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு சிலோன் நேர்சிங் கல்லூரியில் தாதிய உதவியாளர் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த தாதிய உதவியாளர்களுக்குத் தொப்பி அணிவித்துப் பட்டமளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (19) மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

மலர் மாலைகள் அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன், ஒருநிமிட இறை வணக்கத்தோடு தேசிய கீதம் இசைக்கப்பட்டு அதிதிகளினால் மங்கல விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமானது.

சிலோன் நேர்சிங் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெ. மியூறியா டிலாணியின் தலைமையில் ஆரம்பமாகிய நிகழ்வில், கலாசார நடனம் இடம்பெற்றதுடன், சிலோன் நேசிங் கல்லூரியில் ஒரு வருட கால தாதிய உதவியாளர் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 100 தாதிய உதவியாளர்களுக்குத் தொப்பி அணிவித்து பட்டமளிக்கப்பட்டது. சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இதன் போது பதக்கம் அணிவிக்கப்பட்டு, நினைவுச் சின்னமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் (திட்டமிடல்) பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி எஸ்.ஸ்ரீதரன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக மக்கள் ஜனநாயக காங்கிரசின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.மோகனகுமார், கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர். முரளீஸ்வரன், சிலோன் நேர்சிங் கல்லூரியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் எஸ்.கந்தசாமி, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ். அதிசயராஜ், மக்கள் வங்கியின் முகாமையாளர் ஈ.ஜீ.பிரகாஸ், எந்திரி ஏ.தம்பிமுத்து, கல்லூரியின் அதிபர் எம். கே.சிவசிதம்பரம், தாதிய உத்தியோகத்த உயர் அதிகாரிகள் மற்றும் கௌரவம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## நல்லூர் சங்கிலியன் பூங்காவில்

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் நாளை ஆரம்பம்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் கார்த்திகை வாசம் என்ற பெயரில் நடத்தி வரும் மலர்க் கண்காட்சி இந்த முறையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) நடை பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி நடைபெறும் மலர் முற்றம் காட்சித்திடல் நாளை புதன் கிழமை (22) பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் (கிட்டுப் பூங்கா) திறந்துவைக்கப்படவுள்ளது.

கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் தொடக்க நிகழ்வில் சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், சமூக அரசியல் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இந்தக் கண்காட்சி இந்த மாதம் 30 ஆம் திகதிவரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இந்த முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய மட்டப் போட்டிகளில் மூதூர் வலயத்துக்கு 6 இடங்கள்

**(எஸ்.கீதபொன்கலன்)**

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட கர்நாடக சங்கீத, பரத நாட்டிய போட்டிகளில் மூதூர் வலயம் 6 இடங்களைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற போட்டிகளில் மூதூர் கல்வி வலயத்தின் புனித அந்தோனியார் மகா வித்தியாலயம், கல்லடி மலைநீலீ அம்மன் வித்தியாலயம், திருவள்ளுவர் வித்தியாலயம், கிளிவெட்டி மகா வித்தியாலயம், கட்டை பறிச்சான் விபுலானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து போட்டிகளில் பங்கு பற்றி இருந்தன.

300 மாணவர்களைக் கொண்ட மற்றும் 300 தொடக்கம் 1000 மாணவர்களை கொண்ட பாடசாலைகளுக்கு இடையிலும் இரு போட்டி பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டிகளில் மூதூர் வலயப் பாடசாலைகள் பங்கு பற்றி இருந்தன.

300 மாணவர்களைக் கொண்ட பாடசாலை பிரிவில் பங்கு பற்றிய கல்லடி மலைநீலீ அம்மன் வித்யாலயம் நாட்டார் பாடல் நிகழ்ச்சியில் முதல் இடத்தை பெற்றுள்ளது. அத்துடன் புனித அந்தோனியார் வித்தியாலயம் திரைசைப் பாடல் நிகழ்ச்சியில் மூன்றாம் இடத்தையும், கிளிவெட்டி மகா வித்தியாலயம் வயலின் இசை நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது .

300 தொடக்கம் 1000 மாணவர்களை கொண்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிப் பிரிவுகளில் கட்டை பறிச்சான் விபுலானந்த வித்தியாலயம் நான்கு போட்டிகளில் பங்கு பற்றி, திரை இசை பாடல், புல்லாங்குழல் இசை ஆகிய நிகழ்ச்சியில் முதலாம் இடத்தையும், கர்நாடக இசை, கொழுந்து நடனம் ஆகிய நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளன.





# கொணாகொல்ல கிராமத்தில் வைத்தியசாலை திறந்துவைப்பு

**(எஸ்.கீதபொன்கலன், எம்.ஏ.ஏ.அக்தார்)**





அம்பாறை மாவட்டம் கொணாகொல்ல கிராமிய வைத்தியசாலை ஞாயிறன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலைக்கான அடிக்கல் கடந்த 4 மாதங்களுக்கு முன் மாகாண ஆளுநரால் நடப்பட்டிருந்த நிலையில் மிகத் துரிதமாக நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாகாண ஆளுநர் அம்பாறை மாவட்ட கொணாகொல்ல கிராமத்துக்கு விஜயம் செய்த பொழுது அந்தப் பகுதி மக்கள் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திசாநாயக்க, வீரசிங்க ஆகியோர் வைத்தியசாலைநிர்மாணித்துதருமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

பொது மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 34 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்த வைத்தியசாலை ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய அமைக்கப்பட்டது.

ஆளுநரின் இந்த துரித நடவடிக்கைக்கு அம்பாறை மாவட்ட மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# தாதி உத்தியோகத்தருக்கு தங்குமிட விடுதி திறப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

தெஹியத்தகண்டிய ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட விடுதியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அண்மையில் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க டப்ளியு.டீ. வீரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# தேசிய மட்ட குழுநடன போட்டியில் முதலிடம்!

(பழுவூரான்)

அனுராதபுரத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான சமஸ்தலங்கா தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கிரான் மத்திய கல்லூரியின் கீழ் பிரிவு குழுநடனம் மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தக் கல்லூரியின் சார்பில் மாகாண மட்டப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற குழுநடனம் (கீழ் பிரிவு) மற்றும் குழுப்பாடல் (சிரேஷ்ட) அணியினர் தேசியமட்டப் போட்டி களில் பங்குபற்றியிருந்த நிலையில் குழு நடனத்தில் போட்டியிட்ட மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

கிரான் மத்திய கல்லூரியின் வரலாற்றில் நடனப் போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும், இந்த வெற்றி கல்லூரியின் முதல்வர் மா.தவராஜாவின் வழிகாட்டலில், ஆசிரியர்களான செல்வி. ந.வினோதா, திருமதி ஜனிஷா தயாளுபன் மற்றும் பழையமாணவன் ஜேசுசகாயம், சங்கீத ஆசிரியை திருமதி சேஷயனா சீகரன் ஆகியோரின் கடின முயற்சியில் பெறப்பட்டதென பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.





# முதியோருக்கு நிந்தவூரில் உதவி!

(அஸ்ஹர் ஆதம்)

வறிய குடும்பங்களைச் சேர்ந்த முதியோருக்குக் குறைந்தபட்ச வசதிகள் மற்றும் சுகாதார பொருள்களை நிந்தவூர் பிரதேச செயலகம் வழங்கயுள்ளது.

முதியோருக்கான தேசிய செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் நிந்தவூர் பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கு மொத்தமாக 5 லட்சம் ரூபா பெறுமதியான கட்டில்கள், மெத்தைகள் மற்றும் கொமட், நீர் மெத்தைகள் என்பன பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டன.

முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.பி.நிஷ்பானின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலர் ஜெஸான் ஆசிக், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், நிதி உதவியாளர் மற்றும் சமூக சேவை பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சி கல்குடாவில் அங்குரார்ப்பணம்!

**(அஸ்ஹர் ஆதம், சப்னா றிபாஸ், எம்.எம்.றம்ஸீன்)**

கல்குடா டைவர்ஸின் இலவச நீச்சல் உயிர்காப்பு பயிற்சிநெறி ஒன்று அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

இதுகால வரை மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தி உயிர்காப்பு நீச்சல் பயிற்சி நெறியை வழங்கி பல்வேறு சாதனைகளையும் பல நீச்சல் வீரர்களையும் உருவாக்கி வரும் கல்குடா டைவர்ஸ் அணியினர் அண்மையில் அக்கரைப்பற்றிலும் உயிர்காப்பு, நீச்சல் பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளனர்.

அக்கரைப்பற்று, பாலமுனை இளைஞர் சபையினரின் வேண்டுகோளுக்கு அமைய முதற்கட்டமாக சுமார் 100 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி நெறிகள் கல்குடா டைவர்ஸின் பிரதான பயிற்றுவிப்பாளர்களால் வழங்கப்படவுள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு அக்கரைப்பற்று மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது.

பாலமுனை இளைஞர் சபையின் ஆலோசகர் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் றியாஸ்தீன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர், பாலமுனை தக்வா பள்ளிவாயல் தலைவர் றியாத் ஹஜியார், அக்கரைப்பற்று மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளர், பாடசாலை நீச்சல் தடாக பொறுப்பாசிரியர் ஜாபிர், கல்குடா டைவர்ஸின் பிரதம பயிற்றுவிப்பாளர் இப்றாஹீம், ஆசிரியர் பயிற்றுவிப்பாளர் றுபேஸ்கரன், பிரதிப் பணிப்பாளர் றபாய்தீன், பொருளாளர் ஜெளபர் ஆகியோரும் உதவிப் பயிற்றுவிப்பளர்களும் கலந்து கொண்டனர்.

மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக இவர்களுக்கான பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.



## சந்திப்பு...

**(அஸ்ஹர் ஆதம்)**

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியை முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட் ஏ.எம்.பைசால் மற்றும் ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்றாஹீம் சாஹிப் அன்சார் ஆகியோர் தூதரகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**






# மீனவர் தினத்தை முன்னிட்டு சைக்கிள் பவனி!

**(எஸ். தவசீலன்)**

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு கவனவீர்ப்பு ஊர்வலம் ஒன்று இன்று (21) காலை 10 முல்லைத்தீவில் இடம்பெற்றது.

ஆரோக்கியமான கடல் சுற்றுச் சூழல் அமைப்புக்களின் முக்கியத் துவத்தை எடுத்துரைத்தல் மற்றும் உலகில் நிலையான மீன் வளங்களை உறுதி செய்தல் எனும் தொனிப் பொருளில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது.

இந்த ஊர்வலம் சிலாவத்தை சந்தியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத் தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வந்து நிறைவு பெற்றது.மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தியிருந்ததுடன்அதனை வெளிப்படுத்தும் வகையிலான ஊர்வலங்களையும் மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், மீனவர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
















# நோர்வூட் பொலிஸ் பிரிவில் சிறுவர்களின் விழிப்புணர்வு!



**(மஸ்கெலியா நிருபர்)**

2023 சிறுவர் தினத்தை நோர்வூட் நிவ்வெளி பாட சாலை ஏற்பாடு செய்திருந் தது. இதில் சிறுவர் உரிமை விழிர்ப்பூட்டல் ஊர்வலம், வீதி நாடகம் மற்றும் விளை யாட்டுகள் நடைபெறறன.

இதன்போது ரொக்வூட் பெற் றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனை வரும் வரவேற்கப்பட்டுக் கௌர விக்கப்பட்டனர். இந்த நிகழ் வில் ஆசிரியர் தினத்தை முன் னிட்டுப் பெற்றோர்களால் ஆசிரி யர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



# நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தருக்கு புதிய சீருடை!

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகத் தின் அலுவலக உத்தியோகத்தர்க ளுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு பிரதேச செயலர் ஆர். ராகுல நாயகி தலைமையில் நேற்று (20) நடைபெற்றது.

புதிய சீருடை அறிமுக நிகழ்வின் போது, பிரதேச செயலர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அலுவலக உத்தியோகத்தர்கள் மத்தியில் உரை யாற்றினார். பிரதேச செயலர் தனது உரையில், அலுவலக கடமைகள் தொடர் பிலும் பொது மக்களுக்கு அரச சேவை யாளர்கள் மேற்கொள்ளவேண்டிய சேவைகள் தொடர்பிலும் விளக்கமளித் தார். அலுவலக உத்தியோகத்தர்களின் கடமை மற்றும்பொறுப் புகள் தொடர்பில் உத்தியோகத்தர்கள் கூட்டுப் பொறுப் புடன் செயல்பட வேண்டியதன் அவசியத் தையும் இங்கு வலியுறுத்தினார்.

# ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படும்!

## - பிரதமர் நரேந்திர மோடி வாக்குறுதி



ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் பெட்ரோல், டீசல் விலையை மறுஆய்வு செய்வோம் என்று பிரத மர் நரேந்திர மோடி வாக்குறுதி அளித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவைக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. ராஜஸ்தானை ஆளும் காங்கிரஸ் அரசுக்கு நேரடி போட்டியாக பா.ஜ.க. தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

இதையடுத்து பா.ஜ.க. முக்கிய தலைவர்கள் பல்வேறு தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதையொட்டி, பாலி பகுதியில் பா.ஜ.க. சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார்.

இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில், நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து, காங்கிரஸ், அதன் கூட்டணி கட்சிகள் பெண்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அந்த கூட்டணி கட்சித் தலைவர்கள் நமது தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு எதிராக கண்டிக்கத்தக்க கருத்துகளைக் கூறி வருகின்றனர். பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் சட்டப்பேரவையில் பெண்களுக்கு எதிராக அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆனால், இதுகுறித்து எந்த காங்கிரஸ் தலைவரும் எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இங்கு பா.ஜ.க. ஆட்சி ஏற் பட்டதும் பெட்ரோல், டீசல் விலை மறுஆய்வு செய்யப்படும். பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ராஜஸ்தான் மாநிலத்தைச் சுற்றியுள்ள மாநிலங்களில் பெட்ரோல், டீசல் விலை குறைவாக இருக்கும்போது இங்கு மட்டும் அதிகமான விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. அதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# த்ரிஷாவைப் பற்றி தவறாகப் பேசவில்லை: மன்னிப்பு கேட்க முடியாது என்கிறார் மன்சூர்



நடிகை த்ரிஷாவப் பற்றித் தான் தவறாக ஏதும் பேசவில்லை என்றும் தன்னிடம் எந்த விளக்கமும் கேட்காமல் நடவடிக்கை எடுத்ததன் மூலம் நடிகர் சங்கம் மிகப்பெரிய தவறு செய்துவிட்டது எனவும் நடிகர் மன்சூர் அலி கான் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விவகாரத்தில் தான் மன்னிப்பு கேட்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நடிகை த்ரிஷா தொடர்பில் பேசிய பேச்சு சர்ச்சையான நிலையில் சென்னையில் இன்று மன்சூர் அலி கான் செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "நடிகை த்ரிஷா பற்றி நான் தவறாகப் பேசவில்லை. உண்மையில் நான் அவரைப் பாராட்டிதான் பேசி னேன்.

அதற்காக அவர் எனக்கு நன்றிதான் சொல்ல வேண்டும். நடிகர் சங்கம் இவ்விவகாரத்தில் மிகப்பெரிய தவறு செய்துவிட்டது. ஒரு விஷயம் சர்ச்சையானால் அதுபற்றி என்னிடம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எந்த விளக்கமும் கேட்கவில்லை. என் மீது தவறாக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

4 மணி நேரத்துக்குள் அவர்கள் அந்த நடவடிக்கையை வாபஸ் பெற வேண்டும். என்னைப் பற்றி மக்களுக்குத் தெரியும். அவர்கள் என் பக்கம் நிற்கிறார்கள். நான் யாரிடமும் மன்னிப்பு கேட்கக்கூடிய ஆள் இல்லை. எரிமலை குமுறினால் சுற்றியிருப்பவர்கள் தெறித்து ஓடுவார்கள்" என்றார்.

முன்னதாக நடிகர் சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில், "மக்களால் கவனிக்கப்படும் பிரபலங்களாக இருக்கும் போது, தான் உதிர்க்கும் கருத்துகளும், வார்த்தைகளும் கண்ணியமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வின்றி அவர் பேசியது மிகவும் தவறாகும். எந்த ஊடகம் முன்பு அவர் பேசினாரோ அந்த ஊடகம் முன்பு உண்மை மனதுடன் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டுகிறோம்" என்று வலியுறுத்தியிருந்தது.

சமீபத்தில் வெளியான வீடியோ ஒன்றில் நடிகர் மன்சூர் அலிகான், நடிகை த்ரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்கு திரைத் துறையில் இருந்து மட்டும் அல்லாமல் பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்களும் எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

மன்சூர் அலிகானின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்த த்ரிஷா, "இவரை போன்றவர்களால்தான் மனித குலத்துக்கே அவப்பெயர். இனி எனது திரை வாழ்க்கையில் அவருடன் இணைந்து நடிக்க மாட்டேன்" என்று கூறியிருந்தார்.

# இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் என்கிறார் ஹமாஸ் தலைவர்



இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளது என ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்துள்ளார். இந்த விடயம் சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே , "இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது" என தெரிவித்துள்ளார்.

கட்டார் இருதரப்புகளுக்கும் இடையே பேச்சு நடத்தி வரும் நிலையில், இரண்டு தரப்பிலும் சுமுக முடிவு விரைவில் எட்டப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில். இஸ்ரேல் 5 நாள் போர் நிறுத்தமும், தெற்கு காசா உட்பட காசாவின் பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை நிறுத்தவும் அந்த பேச்சுவார்த்தையில் கேட்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

அதற்குப் பதிலாக, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் ஆகியோரின் பிடியில் உள்ள 50 முதல் 100 பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கூறப்படுகிறது. இதில் இராணுவ வீரர்களை வெளியேற்ற வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. இந்த நிலையில், பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே விரைவில் உடன்பாடு ஏற்படும் என நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு திடீர் தாக்குதலைத் நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரேலும் தொடர்ந்து தன்னுடைய எதிர்த் தாக்குதலை நடந்தி வருகிறது. இந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றன.

இதற்கிடையே போரை நிறுத்தி காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்ய இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வந்தன. ஆனால், பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என் இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு இன்னும் நிரந்தர முடிவு எட்டப்படவில்லை. இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலில் ஏறத்தாழ 1,200 பேர் கொல்லப்பட்டனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர்.

இதனால், இஸ்ரேல் இராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. கடந்த 40 நாட்களுக்கும் மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 13,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

# உக்ரைனுக்கு திடீர் விஜயம் செய்தார் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர்





அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலாளர் லாயிட் ஆஸ்டின் உக்ரைனுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் லாயிட் ஆஸ்டின் உக்ரைன் தலைநகர் கீவ் நகரத்திற்குச் சென்றுள்ளார்.

உக்ரைன் தலைவர்களை சந்திக்கவும் ஒரு முக்கியமான செய்தியை வழங்கவும் நான் இங்கு வந்துள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான உக்ரைன் நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் அமெரிக்கா அவர்களுடன் இப்போதும் எதிர்காலத்திலும் தொடர்ந்து துணை நிற்கும்' என்று ஆஸ்டின், தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்டினின் இந்த பயணம், சுதந்திரத்துக்கான போராட்டத்தில் உக்ரைனுக்கான அசைக்க முடியாத ஆதரவை உலகுக்கு தெரிவிப்பதாக கீவ் அமெரிக்க தூதர் பிரிட்ஜெட் பிரிங்க் கூறினார்.

எந்தவித முன் அறிவிப்பில்லாத அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலாளரின் உக்ரைன் பயணம் சற்று பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் காலநிலை தொடர்பில் விழிப்புணர்வு உரை

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபீரின் வழிகாட்டலில் "காலநிலை மாற்றம்" சம்பந்தமாக சம்மாந்துறை அல்ᵉ அர்சத் மகாவித்தியாலயத்தில் தரம் 07 இல் கல்வி பயிலும் மின்மினி மின்ஹா என்ற மாணவியால் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு உரை (20) நிகழ்த்தப்பட்டது.

இவரது கருத்தும் தொனியும் பத்து லட்சம் மரங்களை நடவைத்தலும் பத்து லட்சம் பேருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலுமாகும் இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபீர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத், நிர்வாக உத்தியோகத்தர் கே.வி. சலீம், கணக்காளர் ஏ எல். றிபாஸ் மற்றும் பிரதேச செயலகத்தின் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவிக்கு பிரதேச செயலரால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# சிங்கள பாடநெறியின் இறுதி நாள் நிகழ்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பாட நெறியின் இறுதி நாள் நிகழ்வும் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜெ. மதன், வைத்தியசாலை கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, வைத்தியசாலை தாதிய பரிபாலகர் என். சசிதரன், திருமதி. எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் .தோமஸ் தேவஅருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. எஸ். சுகுமார், சுகாதார உதவியாளர்களின் மேற்பார்வையாளர் எஸ். ஜெயகுணம், வளவாளர்களான திருமதி. பி. சந்திரகுமாரி, திருமதி. எம். பி. ஆமினா, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பயிற்சி பெற்ற அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர்.